**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM,(MAHILA COURT),COIMBATORE

S.C.No.93 of 2018

| Name of Witness | PW-14 ஜாய்ஸ்நிர்மலா | Caste | |
|---|---|---|---|
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Cell | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.04.2022.

**முதல்விசாரணை -**

நான் தற்போது ஈ-2 பீளமேடு காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிகிறேன. 18.05.2018 அன்று நான் சரவணப்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். அப்போது குற்ற எண் 652/2016 வழக்கில் சம்மந்தப்பட்ட இறந்துபோன பெண்ணின் பிரேதத்தை ஆய்வாளரின் உத்தரவுப்படி பிரேத பரிசோதனைக்கு ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனை முடிந்தபிறகு உள்ளுறுப்புகளை இரசாயன பரிசோதனைக்காக ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத்தேன் . நடந்த விபரங்களை ஆய்வாளரிடம் சொன்னேன் . அவர் என்னை விசாரித்தார்.

**குறுக்குவிசாரணை-**

இறப்பு ஏற்பட்ட நேரம் எனக்கு சரியாக தெரியாது. காலையில் சம்பவம் நடந்ததாக கேள்விப்பட்டேன். பிரேத பரிசோதனையும், உள்ளுறுப்பு எடுத்து சென்று ஒப்படைப்பதும் ஒரே நாளா என்றால் ஒரே நாள் தான். . பிரேத பரிசோதனை நடந்த நேரம் எனக்கு தெரியாது. உள்ளுறுப்புகளை பெற்றுக்கொண்டநேரம் தெரியுமா என்றால் நேரம் தெரியாது. காலை நேரம்.

## DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM,(MAHILA COURT),COIMBATORE

S.C.No.93 of 2018

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-15 இப்ராகிம் பாதுஷா | Caste | |
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Cell | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 05.04.2022.

**முதல்விசாரணை -**

நான் தற்போது கோவை மாநகர நுண்ணறிவு பிரிவில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 21.10.2016 அன்று பகல் 1.00 மணியளவில் சரவணம்பட்டி காவல் நிலைய பொறுப்பு அலுவலராக இருந்தபோது புஷ்பராணி என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப்பெற்று குற்ற எண் 652/2016 under Sections 174 (3) (within 7 years) of Cr.P.C ஆக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ.10** ஆகும். அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் கோட்டாச்சியர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகல உதவி ஆணையர் கிழக்கு அவர்களுக்கு விசாரணைக்காக வைத்தேன். உதவி ஆணையர் கிழக்கு அவர்கள் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை-**

சம்பவ நேரம் காலை 9.00 இருந்து 9.30 மணி . முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தநேரம் பகல் 1.00 மணி. சம்பவம் நடந்து புகார் கொடுப்பதற்கு நான்கு மணிநேரம் ஆகியுள்ளது என்றால் சரிதான். இயற்கைக்கு எதிரான மரணம் என்பதால் அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் வந்ததா என்றால் வந்தது. புகாருக்கு பிறகுதான் அந்த தகவல் வந்தது. அரசு மருத்துவமனையில் இருந்து முன்பாகவே தகவல் வந்தது என்றாலும், காலதாமாக புகாரைப் பெற்று பதிவு செய்தேன் என்றாலும் சரியல்ல. இறந்து போன பெண் வீட்டார் கொடுத்த பொய்யான புகாரைப்பெற்று போலிசாரால் வழக்கு சோடிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் , சொன்னபடி புகார் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. புகாரில் உள்ளவை உண்மைக்கு மாறான சங்கதிகள் என்றால் சரியல்ல. சம்பவம் குறித்து போன் மூலம் யாரும் தகவல் சொல்லவில்லை. முதல் உதவி செய்வதற்காக காலதாமதம் ஏற்பட்டதாக யாராவது

சொன்னார்களா என்றால் யாரும் சொல்லவில்லை. நான்கு மணிநேரம் காலதாமதத்திற்கு காரணம் சொன்னார்களா என்றால் சொல்லவில்லை. இறந்துபோன பெண்ணை யார் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றால் தெரியாது.